படும்போது, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேருகிறவர்கள் போக பாக்கி இடங்கள் காலியாக இருப்பவை பற்றி ஒரு லிஸ்ட் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களும் வெற்று இடங்களாக வரும்போது, அவைகளும் அறிவிக்கப்படும்.

(இ) கல்லூரிகளில் "ராகிங்" நடப்பதைத் தடுத்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மற்றொரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதாவது, குறிப்பாக பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் "ராகிங்" அல்லது எள்ளி நகையாடுவது என்பது கவலைக்கு இடம் அளிக்கிறது என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அது பற்றி ஒரு சுற்றறிக்கையும் 4—7—1967-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சினியரிங் மற்ற கல்லூரிகளில் அதற்கு இடமளிக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இளைய மாணவர்களை, புதிதாக வரும்போது, மூத்த மாணவர்கள் கேலி செய்யும் பழக்கம், கேலி, கிண்டலாக இல்லாமல், எள்ளி நகையாடி, அழவைத்து, துன்புறுத்துவதாகச் சென்றுவிட்டால் அதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையில், ஒரு மாணவன் மன உளைச்சல் தாங்காமல் தூக்குப் போட்டுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டது பற்றிச் சொல்லப்பட்டது. போலீஸார் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கோவை கல்லூரியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பி.ஈ. டெக்னிக்கல் இறுதி ஆண்டு படிப்பவர்கள் 2 பேரையும், இரண்டாவது ஆண்டில் படிக்கும் மாணவர்கள் 2 பேரையும் சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். எள்ளி நகையாடும் பணியில் 11 மாணவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அப்படி சென்னை "இன்ஜினியரிங்" கல்லூரியில் 3 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் 3 பேர்களை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கடுமையான சுற்றறிக்கைகளை எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்புவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கடுமையான நடவடிக்கைகள் எடுக்கலாம், வெளியேற்றலாம் என்று உத்தரவுகள் இடப்பட்டுள்ளன. இனி மிக ஜாக்கிரதையாக இருக்கும்படி விடுதிக் காப்பாளர்கள், கல்லூரி முதல்வர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சஸ்பெண்ட் செய்யப்பட்ட மாணவர்கள், வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முதல்வர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) நிறுத்தி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு அறிவிக்கைகள். இன்று 10 அறிவிக்கைகள் உள்ளன. ஆனால் விதிகளின்படி ஒரே நாளில் இரண்டு கவன ஈர்ப்பு அறிவிக்கைகளுக்கு மேல் எடுத்துக் கொள்ள முடியாது. ஆகையால் 41-வது விதி 3-வது உட்பிரிவைத் தளர்த்த வேண்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே 41—வது விதி 3—வது பிரிவின்படி ஒரு நாளைக்கு 2 அறிக்கைகள தெரிவிக்கலாம் என்று உள்ளது. அதை 244—ஆம் விதியின்படி இன்று தளர்த்த வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவ அந்த விதியைத் தளர்த்த பேரவை ஒருமனதுடன் அனுமதிக்கிறது. எனக் கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

6. கவன ஈர்ப்பு.

(அ) கோவை பஞ்சாலைகள் கதவடைப்பு

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் உள்ள கம்போடியா, சஜ்ஜீத்தன, ரங்கவிலாஸ், சோமசுந்தரா, காளீஸ்வரா, மற்றும் சில மில்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையின்றி அவதியுற்று அவர்கள் குடும்

பங்கள் வறுமையில் வாடுகின்ற நிலைபற்றி அவசரமும், முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு எம். பூபதி அவர்கள் இதே காரியத்திற்காக ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. எம். பூபதி: கோவையில் சுமார் 8 பஞ்சாலைகள் மூடப்பட்டுக் கிடப்பதால் பல்லாயிரக்கான தொழிலார்கள் வேலை வாய்ப்பின்றி, வருவாய் ஏதுமின்றி வறுமையில் வாடிக் கிடக்கின்ற நிலைமை பற்றி, அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1965–66-ல் இம்மாநிலத்தில் மின்சார வெட்டு நீண்டதொரு கால அளவுக்கு நிலவியது. இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்குவது குறித்துக் கட்டுப்பாடுகளை விதித்தது. சந்தைகளில் துணிகள் விற்கப்படாமல் இருந்த கால அளவின்போது நூல், துணி இருப்புகள் துணி ஆலைகளில் தேங்கிக் கிடந்தன. மேற் குறிப்பிட்ட காரணங்களால், கடந்த இரண்டாண்டுகளாக இம்மாநிலத்தில் துணி ஆலைத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல ஆலைகளும், ஏனைய மாவட்டங்களில் உள்ள ஒரு சில ஆலைகளும் மூடப்பட்டன. சில ஆலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. மூடிய ஆலைகள் மீண்டும் செயல்படவும், மேற்கொண்டும் ஆலைகள் மூடப்படாதிருக்கவும், அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. தென் இந்திய ஆலை முதலாளிகள் சங்கத் தலைவர், தென் இந்திய துணி ஆலை ஆராய்ச்சி சங்கத்தின் நெறியாளர் ஒருவர், கைத்தறித்துறை நெறியாளர் ஆகியோர் அடங்கிய தொழில் நுட்பத் தனிக் குழு ஒன்று 1966 ஜூன் திங்களில் அமைக்கப்பட்டது. மூடப்பட்ட ஆலைகளின் தொழில் நிலை, நிதி நிலை குறித்து ஆய்வு செய்து அவற்றை மீண்டும் தொடங்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக, அக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் கம்போடியா ஆலை, கோவை மாவட்டம் ஜனார்த்தன ஆலை, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோயில் கீதாஞ்சலி ஆலை ஆகியவற்றிற்கு ரூ. 25·85 இலட்சம் வரையில் உத்தரவாத உதவியளிக்க (guarantee-assistance) அரசு முன்வந்தது. பாலமலை ரங்கநாதர் ஆலைக்கும் காளீஸ்வரர் ஆலைக்கும் உதவி வழங்க வேண்டும் என்று குழு பரிவுரை செய்யவில்லை. அவற்றின் இருப்புக்களைக் காட்டிலும் பொறுப்புக்கள் அதிகமாயிருந்ததே அதற்குக் காரணம். பொறுப்பு ஏற்கப்பட்ட உதவியைக் கீதாஞ்சலி ஆலை பெற்று, 29—6—1967-ல் மீண்டும் செயற்படத் தொடங்கியது. ஏனைய இரண்டு ஆலைகள் கடன் பெறும் பொருட்டு அவர்களுடைய வங்கிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகின்றன. 1967–ஏப்ரலில் முக்கூட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. டாக்டர் பி. எஸ். லோகநாதன் அக்குழுவின் தலைவராவார். அதில் பதினான்கு உறுப்பினர்கள் உள்ளனர். மூடப்பட்டுள்ள ஆலைகள் குறித்தும், மூடப்படும் நிலையில் உள்ள ஆலைகள் குறித்தும் இக் குழு ஆய்வு செய்யும். இந்த ஆலைகளை மீண்டும் தொடங்கவும், செயல்நலை ஆட்டம் கண்டுள்ள ஆலைகள் மூடப்படாமல் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதே இக் குழுவின் நோக்கமாகும் அக்குழு தனது முதலாவது இடைக்கால அறிக்கையில், ஒன்பது ஆலைகளுக்கு ரூ. 59·21 இலட்சம் அளவிற்குப் பொறுப்பு உறுதி உதவி வழங்கப் பரிவுரை செய்துள்ளது. குழு பரிவுரை செய்துள்ள கடனைப்பெற தத்தம் வங்கிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி ஆலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அக் குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையில் மேலும் ஏழு ஆலைகளுக்கு ரூ. 71·57 இலட்சம் அளவிற்கு உதவி வழங்குவதற்கும் பரிவுரை செய்துள்ளது. கோவை மாவட்டம், சோமசுந்தரம் ஆலை அலுவல்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக, 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்)

1967 ஜூலை 18] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துமாறு இந்திய அரசைக் கேட்கும்படியும் குழு பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரைகளை அரசு மும்முரமாக ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற்கொண்டும் மூடப்படுவதைத் தடுக்கவும், தேவையுள்ள பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்பதையும், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம்.

(இ) நூல்வரி ஏற்றமும், பஞ்சாலைத் தொழிலாளர் அல்லலும்

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் மத்திய சர்க்கார் 60, 80, 100-ஆம் நம்பர் நூல்களின்மீது ஒரு கிலோ நூலுக்கு ரூ. 1 20 என்றிருந்த வரியை ரூ. 6·20 ஆக உயர்த்தியதால் தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலும் அதில் பணியாற்றுகின்ற 1,‥0,000 தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருப்பதைப்பற்றி அவசரமும், முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, மின்சார வெட்டு, நியாயமான விலைகளில் பஞ்சு கிடைக்காமை, ஏனைய மூலப் பொருள்களின் உயர்விலைகள், கைத்தறித் தொழிலும் பரவலாக அமைக்கப்பட்ட ஏனைய துறைகளும் குறைந்த அளவுக்கு நூல் பயன்படுத்தியது போன்ற பல்வேறு காரணங்களால் தமிழகத்திலுள்ள துணி ஆலைகள் முக்கியமாக நூற்பாலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நெருக்கடியான ஒரு நிலையில் செயல்பட வேண்டி வந்தது. இத்தகையதொரு நெருக்கடி நிலைமையின் காரணமாக, சில ஆலைகள் ஏற்கெனவே மூடப்பட்டு விட்டன. இன்னும் பல ஆலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. மூடிய ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற்கொண்டும் மூடப்படாமல் தடுக்கவும், மாநில அரசு உத்தரவாத உதவி வழங்குவதன் மூலம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கச்சாப் பருத்தியின் விலையும் தயாரிப்புச் செலவுகளும் உயர்ந்தமையாலும் தொழிலாளர் ஊதியங்களும் பருத்தியின் மீதான ஆயத்தீர்வை வீதங்களும் அதிகரித்தமையாலும், கடந்த பன்னிரண்டு மாதங்களில் பருத்தி நூலின் விலைகள் உயர்ந்து கொண்டே போயின 1967–68-ல் இந்திய அரசு வரவு–செலவுத் திட்டத்தில் கண்டு நூல் (Cone yarn) பாவு நூல் (s zed yarn) ஆகியவற்றிற்கான ஆயத் தீர்வைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவு நூல்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு முந்திய வீதங்கள்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு பிந்திய வீதங்கள்.
(1)	(2)	(3)
	(கிலோகிராம்ஒன்றுக்கு	காசுக் கணக்கில்)
Nf. 51 அல்லது அதற்கு மேற்பட்டு	150	620
Nf. 40 லிருந்து 50 வரை ..	120	620
Nf. 34 லிருந்து 39 வரை ..	90	240
Nf. 29 லிருந்து 33 வரை ..	60	240
கண்டு நூல்—		
Nf. 29 லிருந்து 33 வரை ..	50	70

தற்போதைய அதிகரிப்பின் விளைவாக மொத்த உற்பத்திச் செலவில் சுமார் 60 சதவிகிதம் தீர்வையாகச் செலுத்தப்படவேண்டிவரும். நூலுக்குக் கஞ்சி போடும் தொழிற்சாலைகள் (sinzig factories)